<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO. 150/2012 In I.A.617/2018

| | | |
|---|---|---|
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | குமரேசன் |
| Father's Name /W/o | : | லேட்.கோபால் |
| Religion | : | இந்து |
| Caste | : | - |
| Calling | : | - |
| Address | : | அரசாத்தம்மன் கோயில் தெரு,<br>அரக்கோணம் தாலுக்கா. |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 13.09.2021.

<u>குறுக்கு விசாரணை</u>

முதலில் யாரை என் வழக்கறிஞராக வைத்திருந்தேன் என்றால் ஜீவா வழக்கறிஞர் வைத்திருந்தேன். அவரை வைத்து வாக்காலத்தை தாக்கல் செய்தேனா என்றால் ஏதோ ஒரு தாளில் கையெழுத்து செய்து கொடுத்துதேன். இராணிப்பேட்டை செல்ல முடியாததால் ஜீவா வக்கீல் வைத்ததாக எதற்காக சொல்லியுள்ளேன் என்றால் முதலில் இராணிப்பேட்டையில் கோபி வக்கீலை வைத்திருந்தேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ஜீவா, கோபி வக்கீலை நான் வைத்தற்கு ஆதாரமே இல்லை என்றால் சரியல்ல. ஜீவா வக்கீலை எத்தனை நாட்கள் பார்க்கவில்லை என்றால் 441 நாட்கள் பார்க்கவில்லை. நான் சென்று அவரை பார்த்தேனா என்றால் இல்லை. எந்த தேதியில் எனக்கு வாதம் ஏற்பட்டது என்றால் 2017-ல் இருந்து. எந்த மாதம் தேதி என்றால் மாதம் தெரியவில்லை. மாதம் ஒரு முறையாவது வழக்கு என்ன ஆனது என்று வழக்கறிஞரை சந்தித்து நான் தெரிந்திருக்க வேண்டும் என்றாலும் வழக்கறிஞர் மேல் பழிபோடுவது ஞயமற்றது அல்ல என்றால் தவறு தான் உடல்நிலை சரியில்லாததால் பார்க்கவில்லை. எனக்கு

எப்போது பாக்கவாதம் சரியானது என்றால் 2018-ல் சரியானது மாதம் தேதி ஞாபகமில்லை. பாக்கவாதத்திற்கான ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பாக்கவாதம் ஏற்பட்டது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு போட்டது என் அக்கா தான். மற்ற பிரதிவாதிகளும் என்னுடன் பிறந்த சகோதரர்கள் தான். தாவா சொத்தில் உள்ள மண் விற்பானை செய்துவிட்டதால் வேண்டுமென்றே தாமதமாக மனுக்களை தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மண்னை பல லட்சத்திற்கு விற்றுவிட்டதால் வேண்டும்மென்றே அலைக்கழிக்க மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நியாமான காரணம் இல்லாததால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.